வளன்ஆயம்
நொடிதோறும் புதுமைசேர்
தமிழாய்வுத்துறை
தூய வளனார் கல்லூரி [தன்னாட்சி]
திருச்சிராப்பள்ளி– 620002

# ஞானாம்பிகை வழிபாடும் திருவிழாக்களும்

**கோ.க.சத்தீஸ்வரன்**
**இளங்கலைத் தமிழ் முதலாமாண்டு**
**தமிழாய்வுத் துறை**
**தூய வளனார் கல்லூரி (தன்னாட்சி)**
**திரச்சிராப்பள்ளி -2**

**முன்னுரை:**

தமிழகத்தில் சிறு தெய்வ வழிபாடு என்பது கிராமங்களில் வழிபடும் தெய்வங்களைக் குறிக்கும் . இதை சிறு தெய்வம் , நாட்டார் தெய்வம் , குலதெய்வம் என்பார்கள். கிராமத்தில் காலம் காலமாகப் பெண்ணைத் தங்கள் வீட்டுப் பிள்ளையாகவும் கிராமத்தின் அரசியாகவும் கன்னித் தெய்வமாகவும் வழிபடுகிறார்கள். மதுரையில் உள்ள மீனாட்சிக்கு பட்டாபிஷேகம் , திருக்கல்யாணம் மற்றும் தேரோட்டத்துடன் விழாவானது நிறைவுபெறும் . ஆனால் எங்கள் ஊரில் இருக்கும் ஞானாம்பிகை அம்மனுக்குப் பிறப்பு உற்சவம் , பருவமடைதல் உற்சவம் , கல்யாண உற்சவம், வளைகாப்பு உற்சவம், பிள்ளை பெறுதல் உற்சவம் என்று ஒரு பெண் தனது பிறப்பு முதல் புகுந்த வீட்டில் அடையும் மகப்பேறு வரை சீர் செய்வார்கள் . அதுதான் கோகிலாபுரம் ஞானாம்பிகை கோவில் திருவிழா.

**பிறப்புத் திருவிழா:**

எங்கள் ஊர் தாய் தனது பிறப்பு , கோகிலாபுரத்தில் தான் நடக்க வேண்டும் என்று முடிவு செய்தாள் . மதுரை மீனாட்சிஅம்மன் எவ்வாறு வேள்வி தீயில் உதித்தாலோ அதுபோல எங்களது தாய் ஞானாம்பிகை திருமுல்லை நதியில் மூங்கில் கூடையில் மிதந்து வந்தவள் . அதன் நினைவாக இன்றும் ‘மாசி பச்சை ’ மூங்கில் கூடையை முல்லை ஆற்றில் விடுவது வழக்கம் . எங்களது தாய் ஞானாம்பிகை சிறுவயதில் ‘ஞானப் பூங்கோதை நாச்சியார் ’ என்று அழைக்கப்பட்டார் . பிறந்த குழந்தைக்குத் தேவைப்படும் பொருட்கள் அந்த மூங்கில் பெட்டிக்குள் வைப்பார்கள்.அவைகொடி, கொலுசு , கால் சிலம்பு , ஐம்பொன்வளையல் , சிரட்டை ,

மை, காதோலை , கருகமணி அரப்புகாப்பு , பால்பாசி ,கிலுகிலுப்பை, பொம்மை போன்றவை ஆகும்.

**பூப்புனித நீராட்டுத் திருவிழா:**

ஒரு பெண் பருவமடைந்த பிறகு அந்தப் பெண்ணிற்கு செய்யும் சடங்கு பூப்புனித நீராட்டு விழா என்பார்கள் . பருவம் அடைந்த பெண்ணிற்குத் தேவையான சத்தான உணவும் வழங்கப்படும் . மூங்கில் கூடையில் பருவப் பெண்ணிற்குத் தேவையான கண்ணாடி , கலர் போட்டு , மல்லிகைப்பூ , வெண்பட்டு , தாவணி , காசுமாலை, தங்க கொலுசு , சீப்பு , எண்ணெய் , அலங்காரப் பொருட்கள் , நறுமணம் மிக்க வாசனை திரவியம் , பாரம்பரிய ஆபரணங்கள் போன்றபொருட்கள் வைக்கப்பட்டு முல்லை ஆற்றில் இருந்து புனித நீர் எடுத்து புனித நீராட்டு விழாவானது நடைபெறும் . இந்த விழாவிற்கான காரணம் எங்கள் வீட்டில் பருவமடைந்த பெண் இருக்கிறாள் என்பதாகும் . இது காலப்போக்கில் தமிழன் பண்பாட்டில் ஒன்றாக மாறியது.

**திருக்கல்யாணத் திருவிழா:**

இறைவனுக்கு நடக்கும் கல்யாணம் திருக்கல்யாணம் என்று கூறுவார்கள் . கோகிலாபுரத்தில் குடி கொண்டிருக்கும் இறைவிக்கு ஆண்டுதோறும் மாசி மாதத்தில் திருவிழாவானது நடைபெறுவது வழக்கம் . கோகிலாபுரத்தை அரசாட்சி புரியும் ஞானாம்பிகை பட்டாபிஷேகம் முடிந்த பிறகு இரவு நேரத்தில் செங்கோலுடன் குதிரை பூட்டிய தேரில் பவனி வந்தாள் . அப்பொழுது சித்தர் ஒருவர் நெற்றி நிறைய திருநீறு பூசி சடைமுடியுடன் கையில் வாள் ஏந்தி சூரிய கிரீடம் அணிந்து குதிரையின் மீது ஏறி வந்தார். அவர் பெயர் திருக்காளத்தீசுவரன். இருவரும் பார்வையால் பார்த்து காதலை பரிமாறிக் கொண்டனர் . தமிழ் ஆகம விதிமுறைப்படி நீரை வைத்துஇருவருக்கும்திருமணம் நடந்தது . தாய் வீட்டு சார்பாக சீர் வழங்கப்பட்டது . மறு வீடு வந்தனர் . மணப்பெண் கோலத்தில் இருவருக்கும்பாலும் பழமும் வழங்கப்பட்டது.

**வளைகாப்புத் திருவிழா:**

திருமணம் முடிந்து பெண் என்பவள் கருவுற்ற பிறகு நடத்தும் விழா வளையல் காப்பு அல்லது வளைகாப்பு திருவிழா . இதுபோல ஆண்டுதோறும் மாசி மகத்திருநாளில் ஞானாம்பிகைக்கும் உடனுறை திருக்காளத்தீஸ்வரனுக்கும் இந்த

விழாவானது நடைபெறும் . உற்சவ அம்மனுக்கு தாய் வீடு கோகிலாபுரம் சார்பாக 50க்கும் மேற்பட்ட உணவு வகைகள்கொடுக்கப்படும் . வேப்பிலை காப்பு முதலில் அணியப்படும். பிறகு கண்ணாடி வளையல் அணியப்படும் . வயிற்றில் முளைகட்டிய பாசிப்பயறு கட்டப்படும் . வளைகாப்பின் போது இறைவியை மகிழ்விக்க பாடல் பாடப்படும். பல விதமான மலர்களால் சூடிய மாலையை அணிந்து நெல்லை ஊறவைத்து அதனைத் தூவி அர்ச்சனை செய்யப்படும் .இறைவன் பாரம்பரிய அணிகலன் அணிந்து இருப்பான் . பாண்டியன் கொண்டை போடுவார் . இறைவி ஆண்டாள் கொண்டை போடுவார்.

**தாய் தந்தை திருவிழா:**

உலகில் அனைத்து உயிர்களும் இறுதியில் தாய் தந்தை என்பதனை நினைவில் கொள்ளும் ஒரு விழாவாக நடத்தப்படுவது தாய் தந்தை திருவிழா . ஞானாம்பிகையும் திருக்காளத்தீஸ்வரனும் விநாயகர் , முருகன் என்ற பிள்ளைகளைப் பெற்று தாய் தந்தையர்கள் ஆனார்கள் . அம்மனுக்குப் பிடித்த குடப்பணியாரம் பலகாரம் இதன் முக்கிய பங்கு பெறும் . அம்மையும் அப்பனும் பாரம்பரியம் நிறைய ஆபரணம் சூடுவார்கள். அம்பாள் தண்டட்டியும் அப்பன் வண்டு கடுக்கணும் அணிவார்.





**ஞானாம்பிகை பற்றிய நாட்டுப்புறப் பாடல்**

கோகிலாபுரத்தில் பிறந்த ஞானம்மாளுக்கு
குலவ சத்தம் கேட்குதுல்லோ
கொட்டு சத்தம் முழங்குதுல்லோ
கும்மி சத்தம் கேட்குதுல்லோ

முல்லை நதியில் வந்தவளே
மூங்கில் கூடையாம் கருவறையாம்
கன்னிப் பெண்ணா குத்த வைக்க
திருக்காளத்தியே வந்தானே

தேங்காய் உடைக்கவே
தண்ணி தெறிக்கவே
பிறந்த வீட்டு சீர்ர பார்த்து
ஊர்சனம் வாயடைக்க
தெப்பக்குள மெல்லாம் தத்தளிக்க
கோகிலாபுரத்தையே ஆட்சி செஞ்சா

மதுரை மீனாட்சி
மன்னவன் தங்கச்சி
தேரேறி வாரா தெப்பம் பார்க்க
தெப்பத்தினால் நீராடி
தெய்வத்தையே நா வணங்கி

வட்ட வட்ட பொட்டுக்காரி
வண்ண பட்டு சேலைக்காரி
பரிவட்டம் கட்டி வந்தால்
படையெல்லாம் நடுங்குமம்மா

குங்கும காரியவ
குடும்பத்தையும் காத்திடுவா
கோகிலாபுரத்து குலவிளக்கே

புகுந்த வீட்டு பெருமையை காத்திடுவா
மஞ்சள் நிறம் கொண்டவளே
மக்களையும் காத்திடுவா

யாராரு வந்தாலும் தேரோடாது
ஐயர் வந்தாலும் தேரோடாது
வஞ்சிக்கொடி போல மனசு படச்ச
கோகிலபுரத்து மக்கள் தொட்டாலே தேரோடும்
தேரோடும் வீதியிலே
தெருவெல்லாம் பூ மணக்கும்
தென் தமிழ் அரசிஅல்லோ
தென்னாட்டு தலைவிஅல்லோ
ஞானப் பூங்கோதை நாச்சியார் அல்லோ
ஞானத்தின் சுடர்விழியே
எங்கள் கோகிலாபுரத்து ஞானம்மா

**முடிவுரை:**

இந்த ஞானாம்பிகை கோவில் திருவிழாவில் மட்டும்தான் சாதி மத பேதம் இன்றி அனைவரும் ஒன்று கூடுவார்கள் . ஒரு பெண்ணிற்கு அவளது பிறப்பு முதல் புகுந்த வீட்டில் வாழும் வரை தாய் தந்தையர்கள் சீர்செய்யும் முறை பற்றிய இந்தக் கோவில் திருவிழா அனைவருக்கும் தமிழர் பாரம்பரியத்தைப் பற்றி தெரிவிக்கிறது.